தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஜய, ஆடி 2, திருவள்ளுவர் ஆண்டு—2045

2014 ஜூலை 18, வெள்ளிக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"ஞாலம் கருதினும் கைகூடும், காலம்
கருதி இடத்தால் செயின்."

ஒரு தொழிலைச் செய்வதற்கேற்ற காலத்தையும், இடத்தையும் அறிந்து செய்தால் இந்த உலகத்தையே அடைய வேண்டுமென்று நினைத்தாலும் அது கைகூடும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 180, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. பரமசிவம், மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

180—

தண்ணீர் வசதி

***5765—திரு. கே.பி. பரமசிவம்:**

மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரம்பிக்குளம் - ஆழியாறு திட்டத்தின் கடைமடைப் பகுதியான பல்லடம், பொங்கலூர் ஆகிய இடங்களுக்கு தினந்தோறும் தண்ணீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2014 ஜூலை 18

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்க விரும்புகிறேன்.

(அ) மற்றும் (ஆ) பரம்பிக்குளம் - ஆழியாறு பாசனத் திட்டத்தின் கடைமடைப் பகுதியான பல்லடம், பொங்கலூர் ஆகிய பகுதிகளுக்கு வாரத்தின் 7 நாட்களிலும் தண்ணீர் வழங்க இயலாத சூழ்நிலை உள்ளது எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. பரமசிவம் அவர்கள்.

திரு. கே.பி. பரமசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணங்கிய கைகள் விலகும்முன் வரங்களை அள்ளித் தருகின்ற எங்களின் கொடை வள்ளல் மாண்புமிகு அம்மா அவர்களே! (மேசையைத் தட்டும் ஒலி) தமிழர்களின் பாரம்பரியத்தை நிலைநாட்டிய பண்பாட்டுத் தாயே! (மேசையைத் தட்டும் ஒலி) நாடாளுமன்றத் தேர்தலில் இந்திய துணைக் கண்டம் மட்டுமல்லாது, உலகமே வியக்கும்வண்ணம் வெற்றியைப் பெற்றுத் தந்த வெற்றித் தாயே! (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா, தங்களின் பாதம் பணிந்து வணங்குகிறேன்.

பரம்பிக்குளம் - ஆழியாறு பாசனத் திட்டத்தின்மூலம் பல்லடம் தொகுதி விவசாயிகளுக்கு நான்கு மண்டலங்களாகத் தண்ணீர் பிரித்து, ஒரு மண்டலத்திற்கு 4 முறை தண்ணீர் வழங்கப்படுகிறது. ஒவ்வொரு முறையும் பல்லடம் தொகுதிக்கு தண்ணீர் வழங்கும்போது, ஒரு பகுதிக்கு 7 நாட்கள் வீதமும், மற்றொரு பகுதிக்கு 5 நாட்கள் வீதமும், வேறு சில பகுதிகளுக்கு 3 நாட்கள் வீதமும் தண்ணீர் வழங்கப்படுகிறது. வழங்கப்படும் தண்ணீர் அளவினை சரிசமமாகப் பிரித்து வழங்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலும், பல்லடம் தொகுதியில் கடுமையான குடிநீர்த் தட்டுப்பாடு நிலவுவதால், தற்போது முதல் மண்டல பாசனப் பகுதியில் வழங்கி முடிக்கப்பட்டுள்ளது. இரண்டாவது மண்டலத்திற்குத் தண்ணீர் வழங்கும்முன், குளம், குட்டைகளுக்குத் தண்ணீர் வழங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்வார்களா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகப் பணிவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

2014 ஜூலை 18]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரம்பிக்குளம் - ஆழியாறு திட்டத்தின்கீழ், திருமூர்த்தி நீர்த்தேக்கத்திலிருந்து பரம்பிக்குளம் பிரதானக் கால்வாய் மூலமாக மொத்தம் 3 இலட்சத்து 77 ஆயிரத்து 252 ஏக்கர் நிலங்கள் பாசனம் பெறுகின்றன. இக்கால்வாயின் மொத்த நீளம் 124 கிலோ மீட்டர் ஆகும். இக்கால்வாய்மூலம் உடுமலைப்பேட்டை, பொள்ளாச்சி, சூலூர், பல்லடம், காங்கேயம் ஆகிய வட்டங்களிலுள்ள பாசனப் பகுதிகள் பயனடைகின்றன. பரம்பிக்குளம் பிரதான கால்வாயின் 1 முதல் 58-வது கிலோ மீட்டர் வரை உடுமலைப்பேட்டை மற்றும் பொள்ளாச்சி வட்டங்களிலுள்ள பாசனப் பகுதிகளும், 58-வது கிலோ மீட்டர் முதல் 116-வது கிலோ மீட்டர் வரை சூலூர் மற்றும் பல்லடம் வட்டங்களிலுள்ள பாசனப் பகுதிகளும், 116-வது கிலோ மீட்டர் முதல் 125-வது கிலோ மீட்டர் வரை காங்கேயம் வட்டத்திற்குட்பட்ட பாசனப் பகுதிகளும் பயன்பெறுகின்றன.

பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டத்திற்குட்பட்ட பரம்பிக்குளம் பிரதான கால்வாய்மூலம் பாசனம் பெறும் நிலங்கள் நான்கு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, வருடத்திற்கு இரண்டு மண்டலங்கள்வீதம் 4 மண்டலங்களுக்கும் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது. பல்லடம் வட்டத்திற்குட்பட்ட பல்லடம் மற்றும் பொங்கலூர் பகுதிகளில் பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டத்தின்மூலம் ஒவ்வொரு மண்டலத்திற்கும் சுமார் 16,340 ஏக்கர் நிலங்கள்வீதம், நான்கு மண்டலங்களும் சேர்த்து மொத்தம் 65,363 ஏக்கர் நிலங்கள் பாசனம் பெறுகின்றன. ஒவ்வொரு மண்டலத்திற்கும் பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டத் தொகுப்பின் கீழுள்ள அணைகளின் நீர் இருப்பைப் பொறுத்து, ஒரு சுற்றுக்கு 15 நாட்கள் வீதம், 5 அல்லது 6 நனைப்புகள் வழங்கப்படுகின்றன. பாசனத்திற்காகத் தண்ணீர் வழங்கப்படும் காலங்களில் ஒவ்வொரு நனைப்பிற்கும் வழங்கப்படுகின்ற 15 நாட்களில் பாசனப் பகுதிகள் மூன்றாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பாசனப் பகுதிக்கும் 5 நாட்களுக்கு ஒரு முறை, 'முறைவைத்து பாசனம்' என்ற முறையில் தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது. பல்லடம் மற்றும் பொங்கலூர் பகுதிகளிலுள்ள பாசன நிலங்கள் விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகளாக இருப்பதாலும், இப்பகுதிகளில் இரண்டு

ஆண்டுகளுக்கு ஒரு முறை மட்டுமே கிளைக் கால்வாய்களில் தண்ணீர் வழங்கப்படுவதால், பாசனப் பகுதிகள் அனைத்தும் வறட்சியாக இருப்பதாலும், கடைமடைப் பகுதிகளுக்கும் தண்ணீர் முழுமையாக வழங்க கால்வாய் முழு கொள்ளளவிற்கும் தண்ணீர் வழங்கப்பட வேண்டியுள்ளது. எனவே, கால்வாயின் முழு கொள்ளளவிற்கும் தண்ணீர் வழங்க, பாசனப் பகுதிகளை மூன்றாகப் பிரித்து தண்ணீர் வழங்கினால் மட்டுமே கால்வாயின் நீர்மட்டம் உயர்ந்து, மதகின் வழியே போதிய அழுத்தத்துடன் கடைமடைப் பகுதிகள் வரை தண்ணீர் சென்று அனைத்துப் பகுதிகளுக்கும் உரிய தண்ணீர் வழங்க இயலும். எனவே, இப்பகுதிகளில் ஒரு நனைப்பிற்கு 5 நாட்கள் மட்டுமே தண்ணீர் வழங்க இயலும்.

முற்பகல் 10-05

பாசனப் பகுதிகளை இரண்டாகப் பிரித்து ஒவ்வொரு பகுதிக்கும் 7 நாட்கள் வீதம் தண்ணீர் வழங்கும்பட்சத்தில் கால்வாய்களில் போதிய நீர் அழுத்தம் இல்லாத காரணத்தால் கடைமடைப் பகுதிகளுக்கும் உரிய தண்ணீர் வழங்க இயலாது. எனவே, மேற்படி பகுதிகளுக்கு 7 நாட்களுக்கு தண்ணீர் வழங்க சாத்தியக்கூறுகள் இல்லை. உதாரணமாக, 720 ஏக்கர் பாசனப் பரப்பு கொண்ட கிளைக் கால்வாய்களில் 120 ஏக்கருக்கு ஒரு கன அடி வீதம் என்ற விகிதத்தில் மொத்தம் வினாடிக்கு 6 கன அடி தண்ணீர் வழங்கவேண்டும். பாசனப் பகுதிகளை மூன்றாகப் பிரித்து தண்ணீர் வழங்கினால், ஒவ்வொரு முறைக்கும் 240 ஏக்கர் பாசனப் பரப்பிற்கு மட்டுமே தண்ணீர் வழங்க வேண்டியுள்ளதால், கால்வாயின் நீர்மட்டம் உயர்ந்து, மதகில் போதிய அழுத்தத்துடன் தண்ணீர் செல்ல இயலும். பாசனப் பகுதிகளை இரண்டாகப் பிரித்து தண்ணீர் வழங்கும்பட்சத்தில் 360 ஏக்கர் பாசனப் பரப்பிற்கு தண்ணீர் வழங்க வேண்டியுள்ளதால், கால்வாயில் போதிய நீர் மட்டம் மற்றும் அழுத்தம் இல்லாமல் கடைமடைக்கு உரிய தண்ணீர் செல்ல இயலாது என்பதனையும் மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒன்றாம் மண்டலத்திற்கு தண்ணீர் வழங்கியாகிவிட்டது; இரண்டாவது மண்டலத்திற்கு தண்ணீர்விட வேண்டும் என்று சொன்னார்கள். மேலும்

இப்பொழுது குடிநீர்ப் பிரச்சினை இருப்பதால், அங்கு குளம், குட்டைகளுக்கு தண்ணீர் விட வேண்டும் என்றும் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான பார்வைக்கு எடுத்துச் செல்லப்பட்டு, தண்ணீர் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. பரமசிவம் அவர்கள்.*

திரு. கே.பி. பரமசிவம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்று சொன்ன மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மேலும், பரம்பிக்குளத்திலிருந்து காண்டூர் கால்வாய் வழியாக திருமூர்த்தி அணைக்கு தண்ணீர் வருகிறது. தற்போது காண்டூர் கால்வாயில் சீரைமைப்புப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதை விரைவாக முடிப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் பணிவோடு கேட்டு, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காண்டூர் கால்வாய் சீரமைப்புப் பணிக்காக 184 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு, 60 சதவீதப் பணிகள் நிறைவுபெற்றிருக்கின்றன. மீதமுள்ள பணிகளைத் துரிதப்படுத்தி செய்து முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 181, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. அசோக், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*